# <u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

O.S.No.776/2023 Date : 09-09-2025

பெயர் : விஸ்வநாதன் வாசா.1

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார். தாஸ் என்கிற தாசன் என்பவர் பெயரில் பட்டா பெறப்பட்டதாக குறிப்பிட்டு அவர் காலத்திற்கு பின்னிட்டு அவரது வாரிசுகள் இடம் இருந்து அச்சொத்தை கிரயம் பெற்றதாக குறிப்பிட்டு நான் வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். இதற்கு முன்பாக குறுக்கு விசாரணையில் மேற்படி பட்டா தாசன் என்பவர் பெயர் தவறாக குறிப்பிட்டு வழங்கப்பட்டதாக ஒப்புக்கொண்டேன் என்றால் சரிதான் மேற்படி பட்டா வழங்கப்பட்ட நபரின் பெயர் தாஸ் என்கிற தாசன் ஆவார்.
எனது பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணத்தில் தாஸ் என்கிற தாசன் என்பவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டதாக ஏதேனும் சங்கதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி பெயர் தவறாக குறிப்பிடப்பட்ட பட்டாவை பயன்படுத்தி ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல அதில் அது பெயர் ஒற்றுமையால் ஏற்பட்ட எழுத்து பிழையாகும்.மேற்படி பெயர் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது தொடர்பாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு கிரையம் கொடுத்த நபர்கள் பிரமாண பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் ஆனால் அதனை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

எனது கிரயதாரர்கள் எழுதிக் கொடுத்த பிரமாண பத்திரமானது நோட்டரி வழக்கறிஞர் முன்பாக சான்றொப்பம் இடப்பட்டதா என்றால் ஆமாம். எனது கிரையதாரர்களின் பிரமாண பத்திரத்தை பதிவுத்துறை இடம் சமர்ப்பித்து கிரைய பதிவு பெற்றேனோ என்றால் இல்லை. தாஸ் என்கிற தாசன் என்பவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் மூன்று வாரிசுகள். தாஸ் என்கிற தாசன் என்பவரின் வாரிசுகளில் லாரன்ஸ், பார்த்திபன் ஆகியோரிடம் மட்டுமே கிரயம் பெற்றேன் என்றால் சரிதான் மற்றொரு வாரிசான சபிதா என்பவர் ஏற்கனவே காலமாகிவிட்டார் அவரது இறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்து பதிவு செய்தேன். மேற்படி சபிதா என்பவருக்கு திருமணம் நடைபெற்று இருந்ததா என்றால் ஏற்கனவே திருமணம் ஆகி இருந்தது.

மேற்படி சபிதா என்பவரின் வாரிசுகளிடமிருந்து கிரயம் ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை சவிதா என்பவருக்கு குழந்தைகள் ஏதும் கிடையாது அவர் 20 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டதாக எனது கிரயதாரர்கள் என்னிடம் தெரிவித்தார்கள் அவர் இறந்து விட்டதால் மேற்படி எனக்கு கிரயம் கொடுத்த சொத்தை எனது கிரயதாரர்கள் மட்டுமே வைத்துள்ளதாக தெரிவித்து எனக்கு கிரய ஆவணம் எழுதிக் கொடுத்தார்கள். மேற்படி சவிதா என்பவரின் கணவரும் சபிதா என்பவரை 20 ஆண்டுகளுக்கு முன்பாக தனியாக விட்டுவிட்டு வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு சென்றுவிட்டதாக தெரிவித்தார்கள்.

மேற்படி சபிதா என்பவரின் கணவர் சபிதா என்பதை விட்டுச் சென்ற தொடர்பாக விவாகரத்து ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாவா சொத்தானது ஏற்கனவே அரசுக்கு பாத்தியமான சொத்தாக இருந்ததால் அதற்கு சரியாக உரிய ஆவணங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை என எனது கிரயதாரர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். தாவா சொத்தில் நான் வசித்து வருகிறேனா என்றால் இல்லை பராமரித்து வருகிறேன். தாவா சொத்தில் தற்போது யார் இருந்து வருகிறார்கள் என்றால் நான் தான் இருந்து வருகிறேன். நான் அனுபவம் செய்து வருவதற்கான ஆவணம்

ஏதேனும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து வரி தாக்கல் செய்துள்ளேன். பட்டா மற்றும் மின் கட்டண அட்டையை ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன்.

நான் எனது பெயரில் பெற்ற கிரைய ஆவணம் போலியான கிரைய ஆவணம் என்றாலும் அதன் பின்னிட்டு மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்ட பட்டா மற்றும் வீட்டு வரி ரசீது மின் இணைப்பு ஆகியவற்றின் மூலம் தாவா சொத்தில் நான் எவ்வித அனுபவத்தையும் கூற முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு இருப்பிட சான்று ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு முன்பாக தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு யாருடைய பெயரில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது நான் கிரயம் பெற்ற பின்பு எனது பெயரில் நான் மின் இணைப்பு பெற்றேன்.

தாவா சொத்தானது தாஸ் என்கிற தாசன் என்பவருக்கு கிரய ஆவணம் மூலம் வந்த சொத்தா என்றால் இல்லை அவரது பெயரில் அரசாங்க ஆவணங்கள் பதிவுகள் ஏற்பட்டதன் அடிப்படையில் கிடைக்கப் பெற்ற சொத்தாகும். தாஸ் என்கிற தாசன் என்பவர் தாவா சொத்தை ஏற்கனவே முனுசாமி என்பவரிடமிருந்து கிரயம் வாங்கி இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது நான் 21 ஆண்டுகள் வில்லங்கச் சான்றிதழ் பார்த்தபோது அது தொடர்பாக எவ்வித பதிவுகளும் இடம் பெறாததால் அச்சொத்தை நான் கிரயம் வாங்கினேன். தாஸ் என்கிற தாசன் பேரில் 2022 ஆம் ஆண்டு தான் பட்டா வழங்கப்பட்டது என்றால் நான் சொத்தை கிரயம் பெறும்போது 2022 ஆம் ஆண்டு தான் ஆன்லைன் பட்டா வழங்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு பட்டா வழங்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு ஆன்லைன் மூலமாக பட்டா வழங்கப்பட்டதாக சொன்னார்கள். மேற்படி 2015 ஆம் ஆண்டு பட்டா வழங்கப்பட்ட தொடர்பாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை ஆனால் 2015 ஆம் ஆண்டு அரசு மூலமாக விசாரணை செய்யப்பட்டு அ பதிவேட்டில் அந்த விபரங்கள் பதிவு செய்யப்பட்ட பின் தான் பட்டா வழங்கப்பட்டதாக எனது கிரயதாரர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். எனது கிரயதாரர்களின் தகப்பனார் எனக் குறிப்பிடும் தாஸ் என்கிற தாசன் என்பவரின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தகப்பனார் பெயர் சின்னையா ஆவார்.

போலியான பட்டா ஆவணம் மூலம் நான் கிரண ஆவணம் ஏற்படுத்தியுள்ளதால் நான் பெற்ற கிரயம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை யார் மூலமாக கிரயம் பெற்றேன் என்றால் அது பற்றி எனக்கு தற்போது ஞாபகம் இல்லை.
தாவா சொத்தில் நான் சுவாதீனம் வைத்திருக்கவில்லை என்றாலும் பின்னிட்டு ஆவணங்கள் தாவாசொத்திற்கு எனது பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றாலும் நான் உரிய ஆவணங்கள் மூலம் கிரய ஆவணம் பதிவு செய்யாததால் அதன் பின்னிட்டு வழங்கப்பட்ட ஆவணங்கள் எனது சுவாதீனத்தை அங்கீகரிக்க கூடிய ஆவணங்கள் கிடையாது என்றாலும் எனது சுவாதீனத்தை ஆவணப்பூர்வமாக நிரூபணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

**மறுவிசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.